திருவள்ளூர் மாவட்டம்

# முதல் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம்: 3.00 மணி + 15 நிமிடங்கள்

மதிப்பெண்கள்: 100

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து எழுதவும்

### பகுதி - I

15 x 1 = 15

1. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' எனும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் ______.

அ) சிறந்த நிர்வாகத் திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

2. ஆர்கலி என்பதன் பொருள் ______.

அ) மலை ஆ) கடல் இ) வெல்லம் ஈ) நீர்

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் ______ இவ்வாறு வரும்.

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

4. அரியவற்றுள் எல்லாம் அரிதே ______
பேணித் தமராக் கொளல்

அ) சிறியோரைப் ஆ) மேலோரைப் இ) கீழோரைப் ஈ) பெரியாரைப்

5. முல்லை நிலமக்களின் உணவுப் பொருள்கள் ______.

அ) வெண் நெல், வரகு ஆ) மலை நெல், தினை
இ) வரகு, சாமை ஈ) மீன், செந்நெல்

6. "இங்கு நகரப்பேருந்து நிற்குமா?" என வழிப்போக்கர் கேட்டது ______. "அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ______.

அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

7. மரபுத் தொடருக்கு பொருளைத் தேர்க : <u>ஆறப்போடுதல்</u>

அ) காலந் தாழ்த்துதல் ஆ) ஆற்றில் போடுதல்
இ) ஆறவைத்தல் ஈ) ஆற்றில் இறங்குதல்

8. அனைவரின் பாராட்டுக்களால் வெட்கத்தில் பாடகரின் முகம் ______.

அ) சிவந்தது ஆ) மலர்ந்தது இ) சோர்ந்தது ஈ) மிளிர்ந்தது

9. 'தா' என்ற வேர்ச் சொல்லின் வினையெச்சத் தொடர் எது?

அ) அரசர் தந்தார் ஆ) தந்த அரசர் இ) தந்ததை கேட்டார் ஈ) தந்து சென்றார்

10. 'வேலவன் குன்றம் போனாலென்ன? மாலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - வேலவன் குன்றமும் மாலவன் குன்றமும் குறிப்பவை முறையே

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

11. மீளாத்துயர் - எதிர்மறையாக மாற்றுக.

அ) மீளும் துயர் ஆ) மீள் துயர் இ) மீளாத்துத் துயர் ஈ) மீளுகின்ற துயர்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:

வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்
றிண்மை யில்லையோர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால்

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ______.

அ) சிலப்பதிகாரம் ஆ) பெரியபுராணம் இ) கம்பராமாயணம் ஈ) பாரதம்

13. இப்பாடலை இயற்றியவர் ______.

அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) சேக்கிழார் ஈ) வால்மீகி


Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



14. எந்த நாட்டின் சிறப்பு இப்பாடலில் கூறப்பட்டுள்ளது?
அ) மிதிலை ஆ) பாண்டியநாடு இ) கோசலை ஈ) காஞ்சி

15. கம்பர் கூறும் நாட்டில் கொடை இல்லாத காரணம்
அ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஆ) அங்கு வறுமை இல்லாததால்
இ) நல்ல உள்ளம் உடையோர் இல்லாததால் ஈ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் : 4 x 2 = 8
(21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க :
அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.
ஆ) தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் இரா.இளங்குமரனார்

17. வசன கவிதை - குறிப்பு வரைக

18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

19. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

20. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத்தொடர்களாக்குக.

21. "பொருள்" என நிறைவுறும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10

22. கலைச்சொல் அறிக : அ) Consulate ஆ) Folk Literature

குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா :
அ) கூட்டப் பெயர்களை எழுதுக : அ) கல் ஆ) ஆடு

23. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக :
மேகலை, தேன், பூ, விண், மழை, மணி

24. மயங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. நால்வகைப் பாக்களை எழுதுக.

26. உவமைத் தொடரைப் பயன்படுத்தி சொற்றொடர் உருவாக்குக :
மழைமுகம் காணாப் பயிர் போல

27. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
- இத்தொடர் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக.

28. பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறியிடுக.

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.

பகுதி - III

பிரிவு 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் : 2 x 3 = 6

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

30. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

31. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: **2 x 3 = 6**

(34-ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?
34. அடிபிறழாமல் எழுதுக :

    அன்னை மொழியே ........... எனத் தொடங்கும் பாடல்

    (அல்லது)

    தூசும் துகிரும் ......... என தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **2 x 3 = 6**

35. நிரல்நிறை அணி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.
36. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
37. நச்சப் படாதவன் செல்வம் நடு ஊருள்

    நச்சு மரம்பழுத் தற்று - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5 x 5 = 25**

38. அ) நயங்களைப் பாராட்டி எழுதுக :

"கத்துங்கடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசி வரும் - குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும் - காளமேகப்புலவர்

(அல்லது)

கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு
ஆடிஆடி ஓய்ந்துறங்கு - இப்பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

39. அ) 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில், முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com
Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41. நிறுவனம் ஒன்றின் தட்டச்சர் பணி வேண்டி தன் விவரப்பட்டியல் நிரப்புக :
படிவத்தை நிரப்புக : மதுரை மாவட்டம், க.எண். 10/20, கம்பர் நகர், பூஞ்சோலை என்ற முகவரியில் வசிக்கும் கண்மணி நிறுவனம் ஒன்றின் தட்டச்சர் பணி வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புக. (தேர்வர் தன்னை கண்மணி எனக)

42. அ) பள்ளியில் நான், வீட்டில் நான் என்னும் தலைப்புகளில் நீங்கள் பள்ளியிலும் வீட்டிலும் நடந்து கொள்ளும் முறைகளில் ஐந்தினை பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க:

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils.

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான வினா :

உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக :

கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமகால சமூக அமைப்பின் சமூக முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர் இவர். நேர்முக, எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசகர் நெஞ்சங்களில் விதைத்தவர். இவருடைய படைப்புகளுக்குக் குடியரசுத் தலைவர் விருது, சாகித்ய அகாதெமி விருது, சோவியத் நாட்டு விருது மற்றும் ஞானபீட விருது, தாமரைத்திரு விருதுகளும் கிடைத்துள்ளன. "நான் எழுதுவது முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும், எனது தனி முயற்சியின் பயனும் ஆகும்" என்று கூறுகிறார். அர்த்தமே படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது என்பது அன்னாரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

i) ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?
ii) மனிதாபிமானத்தை வாசகர் நெஞ்சில் விதைத்தவர் யார்?
iii) வாசகர் மனதில் ஜெயகாந்தன் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தினார்?
iv) எது படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது?
v) உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு எழுதுக.

## பகுதி - V

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். **3 x 8 = 24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக. (அல்லது)

ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) அன்னமய்யா எனும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)

ஆ) 'அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) முன்னுரை - தமிழன் அறிவியலின் முன்னோடி - விண்வெளியும் கல்பனாச் சாவ்லாவும் - விண்ணியல் அறிவில் நமது கடமை - முடிவுரை. (அல்லது)

ஆ) முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com
Scanned by CamScanner